[1982 மார்ச் 3

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றிய விவரம் தற்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

Centre's assistance towards Drought Relief.

* *Q.* No. 323—THIRU. R. UMANATH: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) The total assistance to this Government has received from the Central Government towards drought relief and ;

(*b*) The details thereof?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ) : வறட்சி நிவாரணப் பணிகளுக்காக பல்வேறு இனங்களில் செலவிட உச்சவரம்பாக ரூ. 49.77 கோடி என்று மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ளது. இதுவரை மாநில அரசு 56 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, வறட்சி நிவாரணப் பணிகளுக்காக நம்முடைய அரசு 56 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறது. ஆனால் மத்திய அரசு 47 கோடியே சொச்சம்தான் தந்திருக்கிறது. இப்படிக்கடுமையான வறட்சி போன்ற நிலைமை ஏற்பட்டு மாநில அரசுகள் நிதி இல்லாமல் கஷ்டப்படும்போது என்ன அளவுகோலைக் கொண்டு மத்திய அரசு உதவிப்பணத்தை நிர்ணயிக்கிறது? எந்தவகையில் கொடுக்க வேண்டுமென்று ஏதாவது நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதா? 'நார்ம்ஸ்' ஏதாவது இருக்கிறதா? அல்லது அவர்கள் இஷ்டம்போல் கொடுக்கலாமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.10)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, மாநிலங்களில் ஏற்படுகின்ற வறட்சி, வெள்ளம், புயல் போன்ற இயற்கை இடர்பாடுகளுக்காக நிவாரணத்தைப் பொறுத்தவரையில் அந்தந்த மாநில அரசுகள் அவர்களுடைய தொகையில் சில பகுதிகளை ஒதுக்கவேண்டும் என்று சொல்லப்படுகின்றது. அதன்படி நம்முடைய மாநிலமும் 8.59 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டி உள்ளது. மாநில பட்ஜெட்டில் நிவாரணப் பணிகளுக்

1982 மார்ச் 3]

மத்திய அரசு உதவி கொடுக்கின்றபோது அதிலே 70 சதவீதம் கடனாகவும் 30 சதவீதம் மானியமாகவும் கொடுக்கிறார்கள்.

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, வறட்சிப் பணிகள் என்று சொல்லக்கூடியவற்றில் அரசாங்கம் நிர்வகித்த அத்தனை பணிகளும் முடிந்துவிட்டனவா? இந்த வறட்சிப் பணிகளைக் கண்காணிப்பதற்கு உறுப்பினர்கள் குழு இருக்கின்றதா? அதிலே அமைச்சரவர்களும் கலந்துகொள்வது உண்டா? இந்த வறட்சிப் பணிகளில் எவ்வளவு முடிக்கப்பட்டிருக்கின்றது? இந்த வறட்சி நிவாரணப் பணிகள் குறித்து அரசியல் கட்சிகளைச் சேர்ந்த அந்த கண்காணிப்புக்குழுவின் உறுப்பினர்கள் என்னென்ன கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிகமான கேள்விகளை மொத்தமாகக் கேட்டால அவை அனைத்திற்கும் நினைவு வைத்து பதில் சொல்ல இயலாது. ஆகவே சுருக்கமாக ஒன்றிரண்டு கேள்விகளை மட்டும்தான் கேட்கவேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, தாங்கள் சொன்னபடி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல கேள்விகளை ஒன்றாக இணைத்துக் கேட்டிருக்கிறார்கள். அதிலே எவ்வளவு என்னுடைய ஞாபகத்திற்கு வருகிறதோ அவற்றுக்குப் பதில் சொலகிறேன். இந்த அரசுதான் முதன்முதலில் வறட்சி நிவாரணப் பணிக்காக பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்ட குழுவினை அமைந்தது. இந்த மன்றத்தில் இருக்கின்ற அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களும் இதிலே இடம் பெற்றிருக்கிறார்கள். மாவட்ட வாரியாக அப்படி குழுககள கூடுகின்றபோது அவர்கள் கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். பெரும்பாலாக எல்லா உறுப்பினர்களுமே பாராட்டி இருக்கிறாாகள். அப்படிப் பாராட்டி இருப்பதற்கான கணக்கும் இங்கே இருககின்றது. பல இடங்களில் நடந்த குழுக்கூட்டங்களில் வருவாய்த்துறை அமைச்சரும் மற்றும் பலவேறு கட்சிகளைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டு இருக்கிறோம். அதிலே அவரவர்களுடைய கருத்துக்கள் எல்லாம் கேட்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று இருக்கின்றது. அந்த உறுப்பினர்கள் எலலாம் மிகவும் பாராட்டுகின்ற கருத்துக்களைத் தான் சொலலி இருக்கிறார்கள். அவற்றிலே ஒன்றைக் குறிப்பிடுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு பெ. சு. திருவேங்கடம் அவர்கள் 21—7—1981 அன்று பேசிய போது வறட்சி நிவாரணப் பணிகள் மிக நன்றாக நடந்திருக்கின்றன என்று சொல்லி இருக்கிறார்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரவர்கள் இப்படி ஒவ்வொரு உறுப்பினருடைய பெயர்களையும் சொல்லி அவர்கள் எல்லாம் இப்படி, இப்படிப்பாராட்டி இருக்கிறார்கள் என்று சொன்னால் நேரம் போதாது. ஆகவே கேள்விக்குச் சுருக்கமாகப் பதில் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் எல்லோருடைய பாராட்டுக்களையும் படிக்கப் போவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்னைப்பற்றி சொல்லி இருக்கிறார்கள். ஆகவே ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் கேட்கக் கூடாது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் ; தலைவரவர்களே, அதுமட்டுமல்ல 11—8—1981-லே அவர்கள் பேசுகின்றபோது வேலைவாய்ப்பு நிவாரணப்பணிகள் மிகவும் மனநிறைவு அளிக்கின்றது என்று தெரித்து இருக்கிறார்கள். அதேபோன்று திரு. துரைமுருகன் அவர்கள் இவ்வளவு சிறப்பான வேலைகள் இதுவரை நடந்ததில்லை என்று சொல்லி இருக்கிறார்கள். அதே போன்று திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்களும் திருச்சி மாவட்டத்தில் இதுபோன்ற நிவாரணப் பணிகள் நடந்தது இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள்.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் கேட்ட மற்றொரு கேள்விக்கு நான் பதில் சொல்கிறேன். வறட்சி நிவாரணப் பணி எல்லா மாவட்டங்களிலும் சிறப்பாக நடந்து முடிந்திருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, வறட்சி நிவாரணப்பணி நடந்து முடிந்துவிட்டதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். நெல்லை மாவட்டத்திலே தாமிரபரணி ஆற்றுப்பாசனப் பகுதியைத் தவிர மற்ற பகுதிகளில் கடுமையான வறட்சி ஏற்பட்டு குடிநீருக்குக் கூட மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய நிலமை ஏற்பட்டிருக்கின்றது. நெல்லை மாவட்டத்தில் ஓட்டப்பிடாரம், கோவில்பட்டி, விளாத்திக்குளம், சங்கரன்கோயில் போன்ற பகுதிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி என்னவென்றால் வறட்சி நிவாரணப் பணியிலே மத்திய அரசு மாநில அரசுக்கு உதவி செய்வது பற்றியது. ஆகவே மற்ற கேள்விகளை எல்லாம் கேட்டால் அதற்குப்பதில் இருக்காது.

1982 மார்ச் 31]

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, இது மத்திய அரசு சம்பந்தப்பட்ட கேள்வியாக இருப்பதால் எங்களுக்கு வாய்ப்பு தரப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மத்திய சர்க்கார், மாநில சர்க்கார் பிரச்சனைகளைப் பற்றி, திரு ரமணி அவர்கள் கேள்வி கேட்டிருக்கிறார். நம்முடைய மாநிலத்தில் அநேகமாக எல்லா ஊர்களிலும், தமிழ்நாடு பூராவும் வறட்சி ஏற்பட்டது. ஒவ்வொன்றையும் பற்றிக் கேட்டுக் கொண்டிருந்தால் கேள்வி நேரத்திற்கென்று ஒதுக்கப்பட்டிருக்கிற நேரம் போதாது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மத்திய அரசாங்கத்தைப்பற்றி அவர் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். அதற்குப்பதில் கூற எங்களுக்கு அனுமதிக்கப்படவில்லை. அத்தோடு பிரதான எதிர்க் கட்சிக்கும் ஒரு கேள்வி கூட அனுமதிக்கவில்லை. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மத்திய அரசைப் பற்றி அவர் எதுவும் தப்பாகச்சொல்லிவிடவில்லை. துணைக் கேள்விகள் கேட்பதற்கு நானாக அனுமதித்தால்தான் கேட்க முடியும். அழகர்சாமி, ரமணி போன்றவர்கள் எதிர்க்கட்சியினர்தான், அவர்களுக்கு அனுமதித்திருக்கிறேன். எல்லாக் கட்சிகளுக்கும் அனுமதிக்கவேண்டும் என்பது முடியாத ஒன்று. அமைச்சர் அவர்கள் சுருக்கமாக திரு. அழகர்சாமி அவர்களின் கேள்விகளுக்குப்பதில் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டிலே ஏற்பட்ட வறட்சிக்கு, நடைபெற்ற வறட்சி நிவாரணம் பற்றித்தான் தெரிவித்தேன். இப்பொழுது மாவட்டந்தோறும் எல்லா இடங்களிலும் நல்ல மழை பெய்திருப்பதாக தெரிகிறது. ஆனாலும் இன்றைக்கு எந்தெந்த மாவட்டங்களில் எப்படி எப்படி, எந்த அளவு மழை பெய்திருக்கிறது, சென்ற ஆண்டின் நிலை என்ன? அதற்கு முந்தைய ஆண்டின் நிலை என்ன? இந்த ஆண்டின் நிலை என்ன, என்பதைப் பற்றிக் கணக்கு எடுத்துக் கொண்டிருக்கிறோம். எங்கே வறட்சியால் பாதிக்கப்படக் கூடும் என்ற நிலை இருக்கிறதோ, அங்கே முன்கூட்டியே நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வறட்சி நிவாரணப் பணிகளுக்காக மாநில அரசுக்கு ஒதுக்கிய தொகை முழுமையாக செலவழிக்கப்படவில்லை என்று சொல்லி, மத்திய அரசுக்குப்புகார்கள் வந்து, அதைப்பற்றி மாநில அரசுக்கு அனுப்பியிருக்கிறதா? அங்குப்பணிகள் நடை பெற்று முடிந்த பிறகு, முறையாக நடைபெற்றதா இல்லையா என்பதைப் பார்க்க, மத்திய அரசின் அதிகாரிகள் வந்து கண்

காணித்தார்களா? அமைச்சர் அவர்களில் பாராட்டியவர்களின் பட்டியலைப் படித்தார். புகார்கள் செய்தவர்களின் பட்டியலையும் படிப்பாரா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பாராட்டுகிற உள்ளம் உள்ளோர் எல்லாம் உயர்வுள்ளோர். பாராட்டியவர்களைப் படித்தேன். (குறுக்கீடு) மன்னிக்க வேண்டும். நான் இதைப்பற்றி பேசுகிறபோது, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மக்கள் வாக்களித்திருக்கிறார்கள் என்றால், நீங்கள் இந்தப் பேரவையிலே வந்து பேசுவதற்கு என்று மட்டுமே வாக்களிக்கவில்லை. தொகுதியில் நடைபெறுகிற பணிகளில் பங்கு கொண்டு, அதற்காக வேலை செய்து அந்தப் பணிகள் செம்மையாக நடைபெற வேண்டும் என்பதற்காக உதவி செய்வதற்காகவும் கூட உங்களுக்கு வாக்களித்திருக்கிறார்கள். ஆகையினால் ஆங்காங்கே நடைபெறுகிற குழுக்களின் கூட்டத்தில் கலந்து கொண்டு, குறைகள் இருப்பின் சொல்லலாம். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கட்டாயம் அதைக் கேட்பார்கள். அப்படிக் கேட்காவிட்டால் எப்பொழுது வேண்டுமானாலும் தொலைபேசி மூலமாகவோ, கடிதம் மூலமாகவோ அல்லது நேரிலோ என்னிடத்தில் தெரிவிக்கலாம். என்று இந்த அவையிலேயே முன்பே சொல்லியிருக்கிறேன். அப்படிப் புகார் தெரிவித்தவர்களின் பட்டியலில் மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்களின் பெயர் இல்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். எங்கேயாவது தவறு அப்படி நேர்ந்திருந்தால், அவர்கள் எப்பொழுது வேண்டுமானாலும என்னிடம் சொல்லலாம். இப்பொழுதும் கூடச்சொல்லலாம், நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மத்திய அரசு கொடுத்த தொகையிலே 70 சதவிகிதம் கடனாகவும் 30 சதவீதம் மானியமாகவும் கொடுக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது வறட்சி நிவாரணப் பணிகளுக்காக செலவழிக்கப்பட்ட தொகை என்பதால். இதில் ரிட்டர்ன் ரிசொர்ஸ்ஸஸ் எங்கே வர இடமிருக்கிறது? ஆகையினால் ஜனங்களுக்கு ஏற்பட்ட கஷ்டத்தைப் போக்குகிற முறையில் செலவழிக்கப்பட்ட தொகை என்கிற காரணத்தால் அந்த 70 சதவீத கடன் தொகையையும், கடன் என்று வைத்துக் கொள்ளாமல், 5 ஆண்டுத் திட்டத்தில் சேர்த்து கணக்கிட்டுவிடாமல், மானியமாகவே கொடுப்பதற்கு, மத்திய அரசாங்கத்திற்கு மாநில அரசு ஃபோர்ஸ் பண்ணி கேட்டு பெற முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு கொடுக்க வேண்டும் என்று வருகிறபோது, அதை நிச்சயமாக மாநில அரசு ஏற்றுக் கொள்ளும். ஆனால் இதுவரைக்கும் அவர்கள் கொடுத்ததில்

மானியமாக கொடுத்தது ரூ.7-50 கோடிதான். இன்னும் கொடுக்க வேண்டிய 5 கோடியில் 1½ கோடி ரூபாய் மானியம் ஆக 9 கோடி ரூபாய் மானியமாக கொடுக்கிறார்கள். வறட்சி நிவாரணத்திற்காக 56.81 கோடி ரூபாய் செலவழித்ததோடு வறட்சிக்காக தக்காவி கடன் கொடுத்ததையும் சேர்த்து, 61.81 கோடி ரூபாய் மொத்தமாக மாநில அரசு செலவு செய்திருக்கிறது. ஆனால் இதுவரையில் கொடுக்கப்பட்டதில் 17 50 கோடி கடனாகவும், 7 50 கோடி மானியமாகவும், ஆக மொத்தம் 20 கோடி தான் மத்திய அரசு கொடுத்திருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9.20)

திரு. ரா. உமாநாத் : நான் கேட்ட கேள்வி வேறு, அமைச்சர் அவர்கள் சொல்லுகிற பதில் வேறாக இருக்கிறது. நான் கேட்ட கேள்விக்கு அமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மத்திய அரசு மானியமாக எவ்வளவு பணம் கொடுத்தாலும், மாநில அரசு ஏற்றுக் கொள்ளும். (குறுக்கீடு) மத்திய அரசை மாநில அரசு கேட்கத் தயாராயிருக்கிறது. கடிதம் எழுதவும் தயாராக இருக்கிறது. அவர்கள் கொடுப்பதற்குத் தயாரா, இல்லையா என்பது தான் தெரியவில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் சென்ற ஆண்டு நிலை பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சென்ற ஆண்டு வறட்சிப் பணிக்குத் தாமதமாகக் கொடுக்கப்பட்டது. இப்போது பல்வேறு பகுதிகளில் வறட்சி நிலை நிலவுகிறது. அது பற்றி மத்திய அரசுக்கு எழுதப்பட்டிருக்கிறதா? மத்திய அரசிடம் உதவி கோரப்பட்டுள்ளதா?

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : சென்ற ஆண்டு வறட்சிப் பணி தாமதமாக எடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். தாமதமாக எடுக்கப்பட்டது என்று சொன்னாலும் சிறப்பாக நடைபெற்றிருக்கிறது என்பதை உறுப்பினர் அவர்களே மூன்று கூட்டங்களில் பேசியிருக்கிறார்கள். சிறப்பாக திருப்தியாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நான் ஏற்கனவே சொல்லி இருக்கிறேன் மத்திய அரசுக்குப் போவதற்கு முன்னால் வறட்சி நிலை எந்தெந்த மாவட்டங்களில் இருக்கின்றன, எங்கே எப்படி, எவ்வளவு மழை பெய்திருக்கிறது என்ற கணக்கையெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் சேகரித்துக் கொண்டிருக்கிறோம் அதேபோல் மத்திய அரசு வந்து பார்ப்பதற்கு. முன்னால் இந்த அரசு காரியங்களில் ஈடுபடத தயாராயிருக்கிறது